542

167

ARYA DHARMAM
TAMIL WEEKLY.

REGD. No. M. 2913

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா ...	ரூ 50
ஒரு வருஷ சந்தா ...	ரூ. 3
ஆறுமாத சந்தா ...	ரூ. 1½

தனிப்பிரதி ஓரணா
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணா 8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் பிரமாதி-ௗ பங்குனி-மீ 29உ 1940ௗ ஏப்ரல்மீ 11உ | லக்-15

வாரக் குறிப்புகள்

ஸ்ரீவத்ஸ. வே. ஸோ. சர்மா

இயற்கையால் செயற்கைக்கு ஆபத்து!! சூர்யனிடம் பற்பல கறும்புள்ளிகள் காண்கின்றன. அவைகளால் ரேடியோவுக்கு ஆபத்துண்டாகிறதென விக்ஞான சாஸ்திரிகள் வருந்துகின்றனர். சூர்யனிடமிருந்து பெறவேண்டியதை மறந்தனரே என வருந்துகிறோம்!

சுயேச்சை முஸ்லீம் கக்ஷி!! புதியதாக ஒன்று டில்லியில் ஆரம்பமாகிறது. பல கக்ஷி முஸ்லீம்களும் அழைக்கப் படுகின்றனர். இதனால ஒற்றுமையும் தேசக்ஷேமமும் ஏற்படுமென நம்புகிறோம்!

எதிர்பார்த்ததே! மதுரையில் ஆலயப் பிரவேசம் ஆரம்பித்தது முதல் சாந்தி இல்லை. ஏதேனும் ஓர் கிளர்ச்சி தீங்கு கலஹம் விஷமம் நடந்த வண்ணமும் இருக்கிறது. சில விஷமிகளின் தூண்டுதலால் இறந்த குருக்கள் நரபலி கொடுக்கப்பட்டதாக வழக்கு கொடுத்தவர் கைதி செய்யப்பட்டு அவர் மீது வழக்கு தொடரப் படுகிறது.

விருதங்கேட்டும் சுகமில்லை பிராமண்யத்தைவிட்டு காங்கிரஸுக்கு உழைத்தவர் தேசத்திற்கும் அச்சபைக்கும் தன்னினத்திற்கும் தனக்குங் கூட நன்மை செய்து கொள்ள முடியவில்லை. சென்னை மேயர் முனிஸிபல் வண்டியை ஷை ஸபைக்கில்லாத வேலைக்கு உபயோகிக்க, அதை கண்டிக்க ஸபை கூட்ட அவர் மறுத்ததால் அவர் மீது வழக்கு தொடரப் பட்டது. வழக்கு வாபீஸ் பெறப்படினும் இது பிராம்ணர்க் கோர் பாடமாம்.

புதிய சட்டத்திற்கு பலபலி இந்திய பாதுகாப்பு சட்டப்படி சென்னையிலும் ஸ்ரீரங்கா சிக்ஷிக்கப்பட்டார். மற்றும் சிலர் மீது வழக்குத் தொடரப்படுகிறது. இவர்கள் தீவ்ரவாதிகள். மந்திரி கோஷ்டியினர் மிதிவாதிகளோ?

தர்மகர்த்தாக்களுக்கு ஓர் எச்சரிக்கை!! ஆலய பிருதுகளை தலைவர் ஊர்வலத்திற்கனுப்புவது, ஓர் கக்ஷி அல்லது ராஜகீய கொடிகளை கோபுரத்தின்மீதல்லது ரதத்தின் மீதேற்றுவது முதலியன தைவாபசாரமாகும். புதிய புதிய கக்ஷிகள் கூறுகிறபடியெல்லாம் ஆலயத்தை ஆட்டி வைப்பதா? அதிலும் கோவிலை அசுத்தமாக்கும் காங்க்ரஸ் தலைவருக்கு திருவண்ணாமலை ஆலய பிருதுகளும் யானையும் சென்றது மிக கண்டிக்கத்தக்கது.

அடிமை புத்தி மாறாதோ!! தூத்துக்குடி அதிகாரிகள் குதிரை வண்டிக்காரருக்கு ஹாட்டும் பூட்ஸும் போட்டால்தான் [illegible] வேலை நிறுத்தம் நடக்கிறது! என்ன பேதமை!! இவர்கள் அனுபவிக்கும் சுகம் போதாதா?

நீண்ட ஆயுஃ ஆசீர்வாதம்!! தற்கால மாகாண ஆக்ஷிகள் அற்பாயுளாக ஆறுமாத காலமே வாழவேண்டியிருந்தது. பார்லிமெண்ட் ப்ரும்மா மற்றும் ஓராண்டு தீர்க்காயுஸ்ஸாக வாழ ஆசீர்வதிக்கிறது. எப்படியோ தர்மஹிம்ஸை இல்லாதிருந்தால் நலமே. காங்க்ரஸ் அதர்மத்திலிறங்காதிருந்தால் இதை எவரும் கண்டிப்பர்!

ஆண்ட்ரூஸ் இறந்தார்! இந்திய பக்ஷபாதியான ஆண்ட்ரூஸ் எனும் வெள்ளைக்காரர் சென்றவாரமிறந்தார்.

தேசீயத் தலைவருக்கு பாடம்! சென்னை கவர்னர் நீலகிரி முனிசிபல் அட்ரஸ் வேண்டாம். அது வீண் பணச்செலவென்றார்.

ஸ்திரீகள் உத்யோகத்திற்கு போகக் கூடாது

ஆமதாபாத் ஸ்திரீகள் முடிவு

குடும்பவாழ்க்கை குலைந்துவிடும்

ஆமதாபாத்தில் நடந்த அகில இந்திய ஸ்திரீகள் கூட்டத்தில், ஸ்திரீகள், ஸர்க்கார் முதலியவைகளில் உத்யோகம் பார்க்கப்போகலாமா வென்கிற விஷயத்தைப் பற்றி விவாதம் நடந்தது. ஸ்திரீகள் உத்யோகத்திற்குப் போவதால் குடும்ப வாழ்க்கை அடியோடு குலைந்து விடுமென்று யாவரும் ஏக மனதுடன் தீர்மானித்தார்களாம்!!

ஸர் கொல்லங்கோடு ராஜா காலஞ்சென்றார்

கொல்லங்கோடு ராஜாவான ஸர் வாஸுதேவ ராஜா அவர்கள் 2தினங்களுக்கு முன் பம்பாயில் காலமானார். சில மாதங்களாகவே அவர் சரீரஸௌகர்ய மில்லாமல் வைத்திய சிகிச்சை பெற்று வந்தார்.

ஸர். ராஜா அவர்கள் ஸனாதன தர்மானுஷ்டானங்களில் மிகுந்த சிரத்தையுள்ளவர். சிறந்த ஆஸ்திகர். ஆசாரத்திருத்தங்களை தீவ்ரமாக எதிர்ப்பவர். இந்திய சட்ட ஸபையிலும் ராஜாங்க ஸபையிலும் நெடுநாளாக மெம்பராயிருந்து, அங்கு வரும் தர்மவிரோதமான சட்டங்களை வெகு பலமாக எதிர்த்துப் போராடி வந்தார். சாரதாச் சட்டம் செய்த காலத்திலும் ரங்கய்யர் ஆலயப்பிரவேச மசோதாவிவாதத்திலும் இவர் ஸனாதனிகள் கக்ஷியை வெகு அழுத்தமாக எடுத்துக் கூறி எதிர்த்தார். சட்ட ஸபைகளில் ராஜிய அம்சங்களிலும் நல்ல பிரக்ஞையுடனும் அனுபவத்துடனும் ஊழியம் புரிந்து வந்தார்.

ஸனாதன தர்ம இயக்கங்களில் இவர் நமக்குத் தலைவராக இருந்து சிறந்த ஊழியங்கள் புரிந்திருப்பது கணக்கில்லை. கேளதேசத்தில் குருவாயூர் ஆலயப்பிரவேச எதிர்ப்புக் கிளர்ச்சியில் மிகுந்த பாடுபட்டு உழைத்தார். அங்கு இவர் நடத்திய கான்பரன்ஸுகளும் பொதுக்கூட்டங்களும் பல. அகில இந்திய வர்ணாச்ரம ஸங்கம் போன்றவைகளிலும் கலந்து உழைத்து வந்தார். கடைசியாக சென்னையில் நடந்த வித்வத் பரிஷத்திலும் அ. இ. வர்ணாச்ரம ஸங்கக் கூட்டத்திலும் இவர் பேசிய தீரமான பேச்சுக்களை இன்னும் நம்மவர் மறந்திருக்க மாட்டார்கள். சென்னை ஆலயப்பிரவேச எதிர்ப்பு விஷயமாயும் இவர் செய்து வந்த பொறுப்பான கார்யம் அநேகம். தமது உடல், பொருள் ஆகியயாவற்றையும் ஸனாதன தர்ம பிரசாரத்திற்கு தியாகம் செய்த அரிய வீரரை தார்மிகர்கள் இந்த ஸமயம் இழக்க நேர்ந்தது பெரிய துரதிருஷ்டமே. இவருடன் சேர்ந்து வேலை செய்துவரும் நமது தலைவர்களுக்கு மிக்க உபயோகமாயுள்ள வலது கைபோன்று விளங்கிய ஸர். ராஜாவின் அகால மரணம் ஆராத் துயரத்தையே அளிப்பதாகும்.

வாக்கின் பிரயோஜனம்

ஜகத்குரு ஸ்ரீ ஸ்வாமிகள் உபதேசம்

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் அவர்கள், திருவாரூர் ருத்ர பாதத்திற்குச் சென்று விட்டு, பங்குனி மீ 12உ திங்கட்கிழமை காலை செம்மங்குடி கிராமத்திற்கு விஜயஞ் செய்து, அன்று ஸ்ரீ சுந்தரேசய்யர் கிரஹத்தில் பிக்ஷை நடந்தது. அன்றைய சாயந்திரம், அரசலனங்காடு, ஐயம்பேட்டை முதலான விடங்களுக்குச் சென்று, கோவில்களை தர்சனம் செய்து, அங்கு கூடியிருந்த ஏராளமான ஜனங்களுக்கு தற்பொழுது ஸ்ரீ மடத்தில் தீர்மானித்திருக்கிற ஏற்பாட்டைப் பற்றி உபந்யாஸம் செய்தார்கள். செவ்வாய்கிழமை ஸ்ரீ ராமுவையர் கிரஹத்தில் பிக்ஷை நடந்தது. இரவு எண்கண் க்ஷேத்திரதர்சனம் செய்து முத்ராதிகாரி நியமனம் செய்யப்பட்டது. புதன்கிழமை, கிரும சமஷ்டியில் பிக்ஷை விமர்சையாய் நடந்தது. சாயந்திரம் வரகூர் பெரியவாளின் கோசத்தையும் பார்வையிட்டார்கள். இரவு, பட்டணப் பிரவேசம், குதூகலமாய் நடந்தது, அன்று கோவிலில் ஸ்ரீ ஸ்வாமிகள், வாக்கின் பிரயோஜனத்தைப் பற்றி, ஓர் அரிய உபந்யாசம் செய்தார்கள். இந்த உபந்யாசத்தின் சாரமாவது :—

லோகத்தில், ஈச்வரனால் மனுஷ்யனுக்கு மாத்திரம் வாக்கு சக்தி கொடுக்கப்பட்டிருக்கிறது. மிருகங்களில் மனுஷ்யனுக்கில்லாத சக்தியும், பலமும் ஜாஸ்தியாயிருக்கிறது. குதிரையின் வேகமாய் ஓடும் சக்தியும், யானையின் பலமும், சிம்மத்தின் சக்தியும், மற்றும் மிருகங்கள் பட்சிகளின் தாவுகிற, பாய்கிற சக்தியும், மனுஷ்யனுக்கில்லை. ஆனால், மிருகங்களுக்கு பேசும் சக்தி கிடையாது. மனுஷ்யனுக்கு மாத்திரம் இச்சக்தி கொடுக்கப்பட்டிருக்கிறது அவன், அப்படி தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வாக்கை, அதைக் கொடுத்த ஈச்வரனுக்கே அர்ப்பணம் செய்யவேண்டும். வாக்கின் மற்றொரு பிரயோஜனம், மனதிலுள்ளதை வெளிப்படுத்துவதே. அப்படி மனதிலுள்ளதற்கு விரோதமாக வெளிப்படுத்தப்படும் வாக்கின் பெயரே, பொய் யென்று சொல்லப்படுகிறது. ஆதலால், மனச்சாட்சிக்கு விரோதமான காரியங்களைச் செய்து, வாக்கை துர்வினியோகப்படுத்தாமல் மேற்படி வாக்கை, தனக்குக்கொடுத்த ஈச்வரனையே பஜிக்க உபயோகப்படுத்தவேண்டும்.

மனுஷ்யனுக்கு வாக்கு, பரமேச்வரனை ஸ்தோத்திரம் செய்வதற்காகத்தான், கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட வாக்கை, தனக்குக் கொடுத்த ஈச்வரனிடத்தில், நன்றியறிதலுடன் அர்ப்பணம் செய்து, எப்பொழுதும் பக்தி செலுத்தவேண்டும். அவன் அந்த வாக்கை அதர்ம விஷயத்தில், பிரயோகப்படுத்தினால், அதற்காக ஈச்வரன், மறுபடியும் அவனை மாடு முதலான வாக்கில்லாத, பிராணிகளாக சிருஷ்டித்து, தண்டிக்கிறார். அதனால் சிக்ஷை, ரக்ஷை செய்யும் அந்த ஸ்ரீ பரமேச்வரன் விஷயமாய், வாக்கு உபயோகப்பட வேண்டும்.

நாம் வந்த கார்யம் என்ன? ஏதற்காக சிருஷ்டிக்கப் பட்டோம் என்று விசாரம் செய்யவேண்டும். பிறந்தது விடுதலையடையவே. சம்சாரக் கடலில் உழன்று கொண்டேயிருந்து, ஜனன மரணங்களினால், மாறி மாறி வந்துகொண்டிருப்பதற்கல்ல, நித்யானந்தமாகிய மோக்ஷத்தை யடையவே, பிறந்திருப்பது. ஞானத்தை யடைய ஒவ்வொருவரும் முயலவேண்டும். அதுதான், முக்கிய கார்யம். ஆனால், ஞானத்தையடைய வேணுமென்று எல்லோரும் கிரஹஸ்தாச்ரமத்தை விட்டு, ஸந்நியாஸம் வாங்கிக் கொள்கிறேன் என்று கிளம்பிவிடில், என்ன செய்வது? கிரஹஸ்தாச்ரமத்தில் இருந்தபடி விசாரம் செய்வதா? வெளிக்கிளம்பி சந்நியாசியாகி விசாரம் செய்வது உசிதமா? ';ஆசைகள் ஒழிய வேணும். ஒன்றையும் கவனிக்கக்கூடாது. ஞானத்தை மாத்திரம் அடையமுயலவேண்டும் என்றால் இந்த கிரஹஸ்தாச்ரமத்தில் முடியாத கார்யமாயிற்றே! அப்படிப்பட்ட கிரஹஸ்தாச்ரமம் தேவையா அல்லது விட்டு விட்டு கிளம்பி விடுகிறதாவெனசந்தேகம் வருகிறது. இதில் என்னுடைய அபிப்பிராயம் கிரஹஸ்தாச்ரமத்தில் இருந்து கொண்டு, கர்மாக்களைக் செய்வது, குழந்தைகளை உத்திபத்திபண்ணுவது சொத்துதர்மமாய் சேர்ப்பது, ஆகாரம் உண்பது, வாசஞ்செய்ய வீடு கட்டிக் கொள்வது, இது மாதிரியான கார்யகளைச் செய்துவருவது தான், பூர்வாங்கமாய்ச் செய்யவேண்டிய கார்யம். ஞானத்தையடைய, ஸந்நியாஸம் வாங்கிக்கொள்ளாமல் கிருஹஸ்தாச்ரமத்திலிருந்து கொண்டு, குடும்பவியவகாரங்களை கவனித்துக் கொண்டிருப்பதுமேலென்றால் இது அஸம்பாவிதமான கார்யமாயிற்றே யெனத் தோன்றலாம்

குழந்தைகளை எதற்காக இப்படி உத்பத்தி பண்ணுவதென்றால், பாபஞ்செய்து கஷ்டப்படும் ஜீவன்களாகிய மிருகங்களுக்கும், பக்ஷிமுதலானவைகளுக்கும், மனுஷ்யஜன்மாவையடைய இயலும்படி, அனுக்ரகம் செய்வதற்காகவே. எந்த மனுஷியன் ஈச்வரார்ப்பணபுத்தியுடன். உற்பத்தியிலீடுபடுகிறானோ, அவன்மூலமாய் ஈச்வரன், பாபிகளுக்கு நல்லஜன்மாவை உண்டாக்கி, கடைத்தேற அனுக்கிரஹிக்கிறார் இவன் எல்லாவற்றையும் விட்டுவிட்டால், பாபஞ்செய்து கஷ்டப்படும் ஜீவன்கள் கடைத்தேற வழியில்லாமல், தவிக்க நேருகிறது. புத்ரனில்லாவிடில் ஜன்மா வீண் என்றும், புத்தாகிய நரகத்தை யடைகிறான் என்றும் சொல்லப்படுகிறது. கர்மாக்களை அவச்யம் செய்யத்தான் வேண்டும். சித்த சுத்திக்கு ப்ரதானம் கர்மாதான் வீடு கட்டுவது எதற்காக? இந்த சரீரம் ஈச்வரனால் சிருஷ்டிக்கப்பட்டது. ஆகையால், இச்சரீரத்திலுள்ள ஹிருதய கமலத்தில், அந்த ஸ்ரீ பரமேச்வரனை ஸ்தாபிக்க வேண்டும்.

ஆனால் இந்த ஹிருதயத்தில் அநேக விஷயங்களைப் புகுத்தி குப்பைத் தொட்டியாக வைத்திருக்கிறோம். அவைகளை சுத்தப்படுத்தி, அதில் உயிருள்ள போதே அந்த பரமேச்வரனை நிலை நிறுத்த வேண்டும். அதற்கு, சரீரம் அவச்யம் வேண்டும். அந்த சரீரத்திற்கு ஆஹாரம் அத்யாவசியம். ஆகாரமில்லாவிடில், ஹானியேற்படும். அப்படிப்பட்ட சரீரத்தை, ரக்ஷிக்க வீடு அவச்யம், வெய்யல், மழை, குளிர் முதலியவைகளிலிருந்து காப்பாற்ற வீடு வேணும். அந்த வீட்டில் வசித்துக்கொண்டு, அந்தச் சரீரம், தர்ம ஸாதனங்களுக்கு உபயோகப்படவேண்டும் சொத்து எதற்குத் தேவை? சரீரம், குழந்தைகள், பந்துக்கள் இவர்களை ரக்ஷிக்க சொத்து, தான்யம் தேவை. தான, தர்மங்களுக்கு உபயோகப்படும். சொத்திருந்தால்தான், தானும், மறறவர்களும் கவலையின்றி க்ஷேமமாயிருக்கலாம். அப்பொழுது, ஆனந்தமாய் ஈச்வரத்யானம் செய்யலாம். ஆனால், சொத்து நியாய வழியில் சேர்ப்பது, வீடு கட்டுவது முதலான கார்யங்கள், போகத்திற்கென்ற உத்தேசத்தோடு செய்யக்கூடாது. இக்கார்யங்களை, இந்த ஸ்ரீ பரமேச்வரனுக்கு அர்ப்பணமாகச் செய்யவேண்டும். அவைகளை, அந்த ஈச்வரனை யடைவதற்கு உபயோகப்படும் கருவிகளாகப் பாவிக்க வேண்டும்.

எல்லோரும் ஸன்யாசிகளாகவோ அல்லது வேறு எவ்விதமாகவோ, குடும்பத்தை விட்டுக் கிளம்பி விடுவதாக வைத்துக்கொள்வோம். ஒருவராயிருந்தால், அவருக்கு பிக்ஷை போட, மனுஷ்யாள் கிடைப்பார்கள். எல்லோரும், குடும்ப கார்யங்களாக மேலே சொல்லப்பட்டவைகளைத் துறந்து, கிளம்பி விட்டால், சிரமமே ஏற்படும், வயல்கள் பாழாய்ப் போகும். ஆகாரம் கிடைக்காது. வீடு வாசல் இடிந்து விடும், பிராணிகள் மரண மடையும். பால், காய்கறி கிடைக்காது. இப்படியானால் ஆத்ம விசாரம் செய்யும் நோக்கத்துடன் கிளம்பி வெளியே போனவர்களுக்கு, அதற்கு அவகாசம் கிடைக்காமல், ஆகாரக்கவலையே பிரதானமாக, மனதை பாதிக்கத் தொடங்கும். பூண்டு, கீரை புல் முதலியவைகளைக் கொஞ்ச நாள் தின்று, அதுவும் கிடைக்காமல் போனால், ஒருவரை யொருவர் அடித்துக்கொண்டு சாப்பிட வேண்டியதுதான் ம[illegible]கும். ஆகையால், வெளிக்கிளம்பின நோக்கம், பூர்த்தியாகாமல் போய் விடுகிறது.

ஆனால், அப்படி சரீரத்தை அவச்யம் ரக்ஷித்துத் தான் ஆகவேண்டுமா? நிவர்திமார்க்கத்தில் சென்றவர்களுக்கு, ஆஹாரக்கவலை இல்லாமலிருந்து, அதனால் சரீரம் அழிந்து போனால் தான், போகட்டுமே யென்றால், ஞானமேற்படாத வளவில், ஈச்வரத்யானமும் உறுதிப்படாமல், சரீரம் அழிந்து விடுவதால், அனர்த்தமேயேற்படும். அடைய முடியாத இந்த மனுஷ்ய ஜன்மாவை அடைந்ததின் பிரயோஜனமும் கிட்டாமல் போய்விடும். ஆதலால் அப்பியாஸத்தின் வழியாக, மனதை ஒரே நிலையில், ஸ்ரீபரமேச்வரனிடத்தில் இடுபடுத்தக் கூடிய பக்குவ நிலையேற்படும் வரையில் கர்மாக்களை விட்டு விட்டு வெளிக் கிளம்பி விடுவது சரியல்ல ஆனால் எந்தக் கர்மாவைச் செய்தாலும் அக்கர்மா, மனதை பரமேச்வரனிடத்தில் ஈடுபடுத்தும் விஷயத்தில் ஒத்தாசை செய்வதாயிருக்கிறதா என்னும் ஒரே நோக்கத்துடனே செய்ய வேண்டும். அதனால் எல்லோரும் கிளம்பி விடுவது அஸம்பாவிதம்.கிரஹஸ்தாச்ரமத்திலிருந்து கொண்டு இச்வரார்ப்பண புத்தியுடன், கர்மாக்களை செய்து கொண்டு,வைராக்யத்தைப் பலப்படுத்தி பரமேஸ்வரனை ஸ்திரப்படுத்தும் சக்திவரும் வரையிலிருந்து, பிறகு கிளம்பலாம். காமக்குரோதாதிகளை ஜயிக்காமல், கர்மாவை விட்டுவிட்டு கிளம்பி விடுவது உசிதமல்ல.

மனதிலுள்ளது, வாக்கில் வரவேண்டும். சத்யத்தையே அனுஷ்டிக்கவேண்டும். எந்தக்கர்மா பண்ணினாலும். அதை ஈச்வரார்ப்

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

வாக்கின் பிரயோஜனம்.

ஜகத்குரு ஸ்ரீ ஸ்வாமிகள் உபதேசம்.

(2ம் பக்கம் தொடர்ச்சி)

பணமாய் செய்து. மனதில் சதா அந்தப் பரமேச்வாத்யானம் செய்யமுயலவேணும். மனது, அந்திம காலத்கில் ப்ராணன் போகும் போது, அந்தப் பரமேச்வரத்யானம் செய்து கொண்டேயிருக்கவேணும். அப்படிப்பட்ட த்யானம் செய்து கொண்டு சரீரத்தை விடவேண்டும்.

"शैशवेभ्यस्त विद्यानां, यौवने विषयैषिणाम् ।
वार्धके मुनि वृत्तीनां योगेनान्ते तनु त्यजां"

என்கிற ரகுவம்ச ஸ்லோகப்படி, வைராக்யம் திடப்பட்டு, மனது பரமேச்வரனிடத்தில் ஒருமைப்பட்ட பிறகே, துறவு மார்க்கம் பொருத்தமாகும். அதே விதமாக. கோவிலில் சோமாஸ் கந்தர், குடும்ப ஸஹிதமாய் இருக்கிறார். வைராக்யம் பலப்பட்டதைக் காட்டும் ரூபமாக தக்ஷிணாமூர்த்தி அவஸரமாய் சின்முத்ரை மூலமாய் அனுக்கிரஹிக்கிறார்.

அந்த ஸ்ரீ பரமேச்வரனைப் பற்றி ', நீலகண்ட விஜயம்" என்று ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் ஒரு கிரந்தம் இயற்றியிருக்கிறார் அதில் ஸ்ரீ பரமேச்வரனுடைய மகிமையை மிக அழகாய் வர்ணித்திருக்கிறார். பாற்கடலை கடைந்த போது, கௌஸ்துபம் அம்ருதம் முதலானது வெளிவந்தன., அதில் ஒவ்வொன்றை ஒவ்வொரு தேவர் கிரஹித்துக் கொண்டார்கள் ஆனல், அந்த மந்தர மலைக்கு, கயிறாக உபயோகப்பட்ட நாக ராஜன் வாசுகி , கக்கிய ஹலாஹல விஷத்தை ஒருவரும் கிரஹித்துக் கொள்ள முன் வரவில்லை. உத்ஸாஹமாயிருந்த அவர்கள் சோர்ந்து ஓட்டம் பிடித்தனர். பிரபஞ்சம் ஸ்தம்பித்து விட்டது. உடனே உமாபதியை சரணமடைந்தார்கள். அவர் அதைச் சாப்பிட்டு, கண்டத்தில் நிறுத்திக் கொண்டார். அப்படிப்பட்ட கருணாநிதியான பரமேச்வரனை அவச்யம் பூஜிக்க வேண்டும். காமன் என்பது உற்பத்தியைக் குறிப்பிடுகிறது. காலன் என்பது சம்ஹாரத்தைக் குறிப்பிடுகிறது. பரமேச்வரன் ஒரு சமயம், தபசுக்கிடைஞ்சல் செய்த மன்மதனை தகித்தும், மார்க்கண்டனைக் கொண்டு போக வந்த யமனை ஸம்ஹரித்து, பக்தனை ரக்ஷித்தார். பரமேச்வரன் இரண்டையும், வென்றவர் என்பதால் ஜனன மரணத்தை அறுத்தவராகிறார். அப்படிப்பட்ட பரமேச்வரனை, கையினால் அர்சித்தும், நேத்திரத்தால் தர்சனம் செய்தும், மனோவாக்குக் காயங்களால், உபாசனையும் செய்யவேண்டும்.

"सा रसना ते नयने तावेव करौ सएव कृतकृत्यः ।
या ये यौ यो भर्गं वदती क्षेतेऽर्चतः स्मरति ॥"

இதற்காகவே, சரீரம் ஏற்பட்டது. சினிமா மாதிரி, விஷயங்கள் தோன்றி புத்தியை சலிக்கப் பண்ணுகிறது. புத்தியை அப்படி சலிக்கவிடாமல், பரமேஸ்வரனிடத்தில் ஒருமைப்படுத்தவேண்டும். உலகத்தில் ஒருவன் தன்னைப் பிரபு வெனச் சொல்லிக் கொள்கிறான். எல்லை கட்டிக்கொண்டு சொல்லுகிறான். அவனுடைய பிரபுத்துவமானது, எவ்வளவு மேம்பட்டதாய் இருந்த போதிலும், ஒருவறையறைக்குள் பட்டதாகவே, யிருக்கிறது. பரமேஸ்வரன் ஒருவன் தான், பிரபஞ்சத்திற்குப் பிரபு. அவனுடைய பிரபுவத்துவமே வறையறைக்குள் படாததாக யிருக்கிறது. சிக்ஷை, ரக்ஷணம் என்கிற பிரபுத்வலக்ஷணமாகிய, இரண்டும், பரமேச்வரனிடத்தில் தான், பூர்த்தியாயிருக்கிறது. தக்ஷயக்ஞத்தில், சகல தேவர்களையும் சிக்ஷித்ததும், கால கூட விஷத்தை உண்டு, சகல சராசரங்களையும் ரக்ஷித்ததும், இதற்கு ஸாக்ஷியாய் இருக்கின்றன.

அதனால் உண்மை ஆத்ம ஸ்ரூபமாகிய "நான்" என்பதை அந்தப் பரமேச்வரனிடத்தில் கலந்து விடும்படி செய்ய வேணும். அதுதான் வீடு, மோக்ஷம் ஸ்ரீபரமேச்வரனால் கொடுக்கப்பட்ட வாக்கை, அவருக்கே அர்பணம் செய்து, கடைத்தேற அனுக்ரஹிக்கும்படி, ஸ்ரீசந்திரமௌளீச்வரரைப் பிராத்திப்போம்.

நாராயணசாமி அய்யர்.

போஸ் கக்ஷியாருக்கு தடை

பலர் கைதியாயினர்

ஸ்ரீமான் ஸுபாஷ்சந்திரபோஸ் ஆரம்பித்துள்ள முன்னேற்றக்கக்ஷியாரின் வேலை திட்டங்கள் தீவ்ரமாயிருப்பது பற்றி கவர்ன்மெண்டார் அதன்மீது நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

வங்காளாத்தில் போஸ்கக்ஷியார் தேசியவாரத்தில் வெளியிடும் பிரசுரங்களையும் பேச்சுக்களையும் தடைசெய்து ஸர்க்கார் உத்திரவு போட்டிருக்கிறார்கள். ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்களும் கூட தடை செய்யப்பட்டிருக்கின்றன.

பம்பாயில் போஸ்கக்ஷியார் தேசியவாரத்தில் நடத்திய ஆர்ப்பாட்டம் ஸம்பந்தமாகச்சிலர் பாதுகாப்புச்சட்டப்படி கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டனர்.

ஆந்திரத்தில் ஸ்ரீமான் அன்னபூர்ணய்யா என்ற போஸ்கக்ஷித்தலைவரும் கைதுசெய்யப்பட்டார்.

வித்யார்த்திகள் தேவை.

"மன்னார்குடி தாலூகா பூவனூர் யஜுர்வேத பாடசாலையில் அத்யயனம் செய்கின்ற பையன்களில் 6 பையன்களுக்கு தற்சமயம் இடமிருப்பதால், சேர்க்கவிரும்பும் பெற்றோர்கள் அடியில் கையொப்பமிட்டவருக்கு முன்பாக 20—4—40க்குள் விண்ணப்பம் செய்துகொள்ளலாம்"

பி. சுப்பையா முதலியார்.

உபசாரம் வேண்டாமென்கிறார்.

சென்னை கவர்னரின் பெருந்தன்மை.

சென்னையின் புதிய கவர்னராகிய கனம் ஹோப்துரையவர்களுக்கு உதகமண்டலம் முனிஸிபாலிடியார் உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுக்கத் தீர்மானித்தார்கள் ஆனல் கனம் கவர்னரவர்கள் தமக்கு உபசாரப்பத்திரம் வேண்டா மென்றும், இப்போதுள்ள ராஜிய, பொருளாதார நெருக்கடியில் சிக்கனமாக இருப்பதே அவச்ய மென்றும் சொல்லி விட்டார்.

The Kumbakonam Mutual Benefit Fund Ltd., Kumbakonam.

NOTICE.

An Extraordinary General Meeting of the Shareholders of the Kumbakonam Mutual Benefit Fund Ltd,, will be held at 9 A. M. on Sunday the 5th May 1940, at the Fund Office Premises No. 58 Big Street, Kumbakonam to consider and pass the following resolution proposed by the Directors as a special resolution, so as to amend the Articles of Association of the Fund under Section 20 of the Indian Companies' Act.

"Resolved that for Article 51 of the Articles of Association of the Fund the following be substituted.

'51. Devolution of Recurring Deposit in case of Death of the Depositor. If a recurring depositor dies, his right in such deposit shall devolve on such person or persons as he has nominated in his application for recurring deposit and such person or persons so nominated shall be entitled at their option to a transfer of the deposit to their name or names or to the payment of the amount of recurring deposit. If no nominee is named in the application for recurring deposit or if at the time when the recurring depositor dies the person nominated in the recurring deposit application, is dead, and there is no fresh nominee indicated by the depositor in the place of his pre-deceased nominee the claim by a person or persons who seeks or seek for transfer of the deposit to his name or their names or for payment of the recurring deposit, shall be put up in the office Notice-Board for a period of three months from the date of claim.

If no other claimant comes forward with any objection to the claim notified, it will be open to the Board to order transfer of the deposit to the claimant's name if he is already a shareholder or becomes a shareholder in the Fund or order payment as the case may require. Should there be rival claimants the Directors may require their respective rights to be established in a Court of Law. Till the said matter is finally disposed of by the Court the Directors may keep pending the final disposal of the deposit. It shall, however be open to the Directors to require, in any case and irrespective of the foregoing, production of Succession certificate or the furnishing of sufficient security before any recurring deposit is transferred to the name of, or paid to, any claimant or claimants. If, later on, the contesting claimants should all join in an application in writing for transfer to their names or for payment to them of the recurring deposit, the Directors may order accordingly if the applicants are already shareholders or take shares in the Fund' ".

THE KUMBAKONAM MUTUAL BENEFIT FUND LIMITED,
KUMBAKONAM,
1—4—1940.

By order of the Board,
V. R. Satakopa Aiyengar,
Secretary.
1—4—40.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்ய தர்மம்

பிரமாதி-௵ பங்குனி-௴ 29௳

மதத்ரோஹிகளின் செயல் பலித்து விட்டது

மதுரை ஸப்கோர்ட்டில், அவ்வூர் ஆலயப்பிரவேச விஷயமாக நடந்து வரும் வழக்கில் ஸப்ஜட்ஜ் ஒரு பூர்வாங்கத் தீர்ப்புக் கூறியிருக்கிறார். ஆலயப்பிரவேசம் போன்ற மதஸம்பந்தமான விஷயங்களில் சர்க்கார் சட்டம் செய்ய அதிகாரமுண்டா, அது செல்லுபடியாகுமா என்ற விவாதம் அங்கு நடந்தது. அதன் மீது ஜட்ஜ் தீர்ப்புக் கூறுகையில், 1935-ம் வருஷத்திய இந்தியா கவர்ன்மெண்ட் சட்டத்தின்படி கவர்ன்மெண்டாருக்கு மத விஷயமாகச் சட்டம் செய்ய அதிகாரம் இருப்பதாயும், அதற்கு முன் இருந்து வந்த வைஸ்ராய் முன்னனுமதி போன்ற பாதுகாப்புக்களும் மேற்படிச் சட்டத்தால் ரத்து செய்யப்பட்டு விட்டதாக ஏற்படுகிறதென்றும், ஆதலால் ஆலயபிரவேசச்சட்டம் செல்லுபடியாகக் கூடியதுதானென்றும் சொல்லியுள்ளார். ஆனால், கோவிலில் தீண்டாதார் புகுந்தால் அவர்கள் எதுவரையில் போகலாமென்பதும், அந்தந்த ஜாதியார் எந்தெந்த விடங்களில் நின்று ஸேவிக்கவேண்டுமென்ற நியமங்களுக்கு மீறிநடக்க சட்டப்படி உரிமை கிடையாதென்றும், இவ்விஷயமாகக் கோவிலின் வழக்கம் தெரியவேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார். இதிலிருந்து இந்த ஆலயப்பிரவேச விஷயமாகக் கோளாறு ஏற்பட்டிருப்பது மட்டும் நிச்சயமாகிறது.

ஆனால், ஜட்ஜ் மதஸம்பந்த விஷயங்களில் சட்டசபைகள் சட்டம்செய்ய அதிகாரமிருப்பதாக கூறும் நிலைமை ஏற்பட்டிருப்பது ஹிந்து மதத்தின் அஸ்திபாரத்தையே அடியோடு தகர்ப்பதாயிருக்கிறது.

இப்போது ஜட்ஜ் கூறியுள்ள அபிப்பிராயத்திலிருந்து, ஹிந்துமதத்தின் எதிர்கால நிலைமை நிர்க்கதியாயும், பயங்கரமாயுமிருப்பதையே மதாபிமானிகள் கவனிக்கவேண்டும். சட்ட ஸபையில் விளங்கும் மெஜாரிடிக் கக்ஷியார் அவ்வப்போது தங்களுக்கு இஷ்டமான வழியில் ஹிந்து மதத்தை ஆட்டிவைத்துப் பாழாக்க முடியும். சட்ட ஸபையிலுள்ள, கிறிஸ்தவர், மஹம்மதியர் போன்ற அன்னியர்கள் புகுந்து நமது மதத்தை நாசப்படுத்த முடியும். இத்தகைய அபாய நிலைமைக்கு ஹிந்து மதத்தை 1935ம் வருஷத்திய சட்டம் உட்படுத்தி வைத்திருப்பதையே மதுரை ஜட்ஜ் வெளியிட்டிருக்கிறார். இதிலிருந்து ஹிந்து தர்மங்களும், தார்மிகர்களும் சீர்திருத்த வெறியர்களிடம் சிக்க வைக்கப்பட்டிருப்பது வெளியாகி விட்டது.

மத விஷயத்தில் சட்டம் செய்யலாமென்பதற்கு, முன் ஆதாரங்கள் சில காட்டப்படுகின்றன. ஸதித்தடுப்புச் சட்டம், மதம் மாறியவர்களின் பாதுகாப்புச் சட்டம், விதவா விவாஹச் சட்டம் முதலியவைகளை எடுத்துக் காட்டுகிறார்கள். 1828ம் வருஷத்தில் உடன் கட்டை விஷயமாக விதிகள் செய்த லார்ட் பெண்டிங் தமது சட்ட விதியானது ஹிந்துக்களின் மதாசாரத்தை பாதிக்காதென்று தாம் தீர விசாரித்து அறிந்தே செய்ததாக ஸமாதானம் கூறியிருக்கிறார். இதிலிருந்து மத விஷயமான சட்டம் செய்ய அதிகாரமில்லையென்ற தத்வத்தை அவர் அங்கீகரித்தாகவே ஏற்படுகிறது.

ஹிந்து மதத்தைவிட்டு கிறிஸ்தவனுக மாறியவனுக்கு, பூர்வ ஹிந்து குடும்ப ஸொத்தில் பாத்யம் உண்டென்று 1850ம் வருஷத்தில் செய்யப்பட்ட சட்டமும், தங்களுடைய மதமாற்ற வேலைக்கு ஸாதகம் செய்து கொள்ள விரும்பின பாதிரிகளின் தூண்டுதலால் ஏற்பட்டது ஸ்மிருதிகளின் விதிப்படி, மதம் மாறியவனுக்கு பூர்வ ஸொத்துரிமை கிடையாதுதான். ஆயினும்! ஹிந்து மத விரோதமான இந்த சட்டம் பாதிரிகளின் செல்வாக்குக் காரணமாக நியாய மற்ற ரீதியில் செய்யப்பட்டது அது இப்போதைய சந்தர்ப்பத்துக்கு உதாஹரணமாகாது. மைஸூரில் இத்தகைய சட்டத்திற்கு ஹிந்துக்கள் இணங்காததே போதுமான ருஜுவாகும்.

1856-ம் வருஷம் இயற்றிய விதவா விவாஹச் சட்டமும், அப்போது இங்கிலீஷ் படிப்பால் புதிதாய் புத்தி கலங்கிய ஆசாரத்திருத்தக்காரர்களின் பலத்த தூண்டுதலின் மேல் செய்யப் பட்டதாகும். இஷ்டமுள்ள ஹிந்து ஸ்தீரீ, விதவா விவாஹம் பண்ணிக் கொள்ளலாமென்று அநுமதிமாத்திரமே அந்தச் சட்ட மளிக்கிறது. சட்டமில்லாவிட்டால்கூட ஸமூஹ வ்யவஸ்தைகளை மீற இஷ்டப்படுவோரை யார் தடுக்க முடியும்? மேலும், மேற்படி இரண்டு சட்டங்களும் கம்பெனி ஆக்ஷிகாலத்தில் யதேச்சாதிகார தோரணையில் செய்யட்டவைகளே. ஹிந்துக்கள் அடிமைகளாயும் பயங் கொள்ளிகளாயும் வாழ்ந்த காலத்தில் செய்யப்பட்டவை. ஆயினும், மதாபிமானிகள் அவைகளை அப்போதே எதிர்த்திருக்கிறார்கள்.

மேலும் மேற்படிச் சட்டங்கள் சிப்பாய் கலஹத்திற்கு முந்தியும், 1858ம் வருஷம் ஏற்பட்ட விக்டோரியா மஹாராணியின் மத அபய விளம்பரத்திற்கு முந்தியும் ஏற்பட்டவை. மஹாராணியார் விளம்பத்திற்குப் பிறகும், 1862, 1897, 1909 வருஷங்களில் பார்லிமெண்ட் செய்த இந்திய ராஜ்யத்திருத்தச் சட்டங்களிலும், மத விஷயமாக ஹிந்துக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த உத்தேசத்துடன் தான் மத விஷயச் சட்டத்திற்கு வைஸ்ராய் முன்னநுமதி வேண்டுமென்ற நியமம் ஏற்படுத்தப்பட்டது. இதைக்கொண்டு மத விஷயச் சட்டம் செய்ய அதிகாரம் தொக்கியிருப்பதாக அர்த்தம் செய்ய இடமில்லை. யாராவது பொறுப்பற்றவர், ஆத்திரத்தினால் மத விஷயச் சட்டம் கொண்டுவர 'விரும்பினால், அதை வைஸ்ராய் தடுக்கவேண்டுமென்கிற எண்ணத்துடனேயே அந்த அதிகாரம் ஏற்பட்டதாகும்.

ஆகவே, இந்தப்பழைய ஆதாரங்களை இப்போது ஆலயப்பிரவேசச் சட்டத்தில் காட்டுவது தர்க்கரீதிக்கும் நேர்மைக்கும் ஏற்றதாயிருக்காது. ஆயினும் 1935ம் வருஷ சட்டம் இந்த அக்கிரமத்திற்கு இடமளிக்கக் கூடியதாக நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. ஹிந்துமதத்திற்கு இத்தகைய தீங்கை ஏற்படுத்தி அதை அழிக்கப்புறப்பட்டவர்கள் நம்மவர்களே என்பதைத்தான் இச்சமயத்தில் ஹிந்து ஸமூஹம் கவனிக்க வேணும். ஆசாரத்திருத்த சரித்திரம் ஆரம்பித்தகாலம் முதல் 35ம் வருஷத்திய சட்டம் ஏற்பட்டகாலம் வரையில் ஹிந்து மதத்தில் தோன்றிய சீர்திருத்த வெறிபிடித்தவர்கள் மதஹத்திக்கும் தேசத்ரோஹத்திற்கும் ஸமமான இந்த நிலைமையை உண்டுபண்ணப் படாதபாடுபட்டுவந்தார்கள். அவர்களுடைய த்ரோஹச்செயல் இன்று மதுரை கோர்ட்டில் பலன்தர ஆரம்பித்து விட்டது. இதர மதஸ்தர்கள் யாவரும் பூர்ணமாக மதஸ்வாதந்திரியத்துடன் வாழவும், அவர்கள் ஸமீபத்தில் நவீன ஹிந்து பயங்கொள்ளிகள் அணுகவும் நடுங்கிக்கொண்டிருக்கையிலும் ஸ்வஜனத்துரோஹமாயும் ஆத்மஹத்திக்கு ஸமமாயும் அவர்கள் செய்த கார்யத்திற்காக அவர்கள் வெட்கித் தலைகுனியவேண்டாமா? இவர்கள் பாரததேச தர்மத்தை வதைத்த குற்றத்திற்காக மனிதர்களிடமில்லாவிடினும் தெய்வத்தினிடமாவது ஜவாப்சொல்ல வேண்டிவருமென்பது திண்ணம்.

மதுரையில் அநுதாபம்

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் மதுரை டவுன் கிளையின் கூட்டமொன்று 7உயன்று நடைபெற்றது. பிரம்மஸ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள் தலைமை வகித்தார்.

கேரள ஸனாதனத் தலைவரான ஸ்ரீ கொல்லங்கோடு வாஸுதேவ ராஜா அவர்கள் பம்பாயில் அகாலமாக இறந்துபோனதைக் கேட்டு வருந்துவதாகவும் அவரது குடும்பத்தினருக்கு அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுவதாயும் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது.

PAYASYA

Increases abundantly
the supply of
Mother's Milk
and
Enriches its quality.
A great boon
to
Mother and Baby,

24 Tolas:- Rs. 2-4-0 for 16 day's use.
(Packing and Postage Extra.)

Apply to :—
Attreya Ayurvedic Works,
Tennure Road, TRICHINOPOLY

மதுரை ஆலயப்பிரவேச வழக்கு

ஜட்ஜ் உத்திரவின் ஸாராம்சம்

மதுரை சப்கோர்ட்டில் ஸ்ரீலஸ்ரீ திருஞானபண்டார சன்னதி அவர்களால் R.S. நாயுடு முதலியவர்கள்பேரில் செய்திருக்கும் ஷை தாவாவில் சென்ற 3—4—40 தினம் கோர்ட்டார் அவர்கள் செய்த உத்திரவின் ஸாராம்சமாவது:—(1) இந்தியா கவர்ன்மெண்டு சட்டப்படி மாகாண சட்டசபைகளுக்கு தர்மஸ்தாபனங்களைப்பற்றி சட்டம் இயற்ற உரிமை உண்டு. 1939ஞு 22 நெ சட்டம் செல்லுபடி உள்ளதுதான் (2) ஆனால் அந்த சட்டம் தீண்டாதார் ஆலயப்பிரவேசம் செய்யலாமென்று அனுமதித்போதிலும் அவர்கள் கோவிலில் எந்த எல்லை வரையில் பிரவேசிக்கலாமென்று குறிப்பிடவில்லை. ஆகையால் கோர்ட்டார் அந்த எல்லையை நிஷ்கர்ஷிக்கபாத்தியமுண்டு (3) அவ்விதம் அந்த எல்லையை நிஷ்கர்ஷிப்பதில் ஆலயப்பிரவேசம் நடந்த 8—7—39 தேதியில் அமுலில் இருந்த சட்டத்தையும் கோவில் வழக்கத்தையும கோர்ட்டார் அனுஸரிக்கவேண்டியதாயிருக்கிறது (4) அப்படிச் செய்வதில் வெளிப்பட முரண்பட்டதுபோலுள்ள இரண்டு விஷயங்களை கவனித்து அவைகளை சமரஸப்படுத்தவேண்டும் முதலாவது கோவில் பட்டர்கள் கர்ப்பக்கிரஹத்தில் இருந்துகொண்டும், பிராம்மணர்கள் அர்த்தமண்டபத்தில் இருந்துகொண்டும் தெய்வத்தை தொழ உரிமை இருப்பது போல் தீண்டாதார்கள் தொழ ஒரு இடம் ஏற்பாடுசெய்யவேண்டும். மற்றொன்று என்னவெனில் ஜாதி ஹிந்துக்கள் இப்பொழுதுள்ள சட்டப்படிக்கும் வழக்கப்படிக்கும் தெய்வத்தை தொழ உரிமையுள்ள இடங்களுக்கு குந்தகமன்னியிலும அவர்கள் உரிமைகளுக்கு ஹானி அன்னியிலும் பாதுகாக்கவேண்டும் (5) அல்லாமலும் தீண்டாதார்கள் ஏற்கனவே இருந்த அல்லது புதிய சட்டப்படிக்காவது வழக்கங்களின்படிக்காவது பிரவேசிக்க பாத்தியமில்லாத அர்த்த மண்டபத்தில் 8—7—39 தேதியில் பிரவேசித்ததாக ஒப்புக்கொள்கிறபடியால்; அதற்கு எவ்வித ஸமப்ரோக்ஷணை செய்யவேண்டுமென்றும் எவ்வளவு செலவிலும் யார் செலவிலும் என்றும் நிஷ்கர்ஷிக்கவேண்டியிருக்கிறது. (6) ஷை அம்சங்களைப்பற்றி வாதிகள் ஏற்கனவே பிராதில் தங்கள் கேஸைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் 10—4—40க்குள் பிரதிவாதிகள் அவைகள் விஷயமாக தங்களுடைய பதில்களைக்கண்டு விவரமாக ஸ்டேட்மெண்டு கொடுக்கும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள்.

ஜீ-வி-வி.

பங்களூர் ஸ்ரீமான் கிருஷ்ண பாகவதர்

குடைந்தையில் கதா பிரவசனங்கள்.

பங்களூர் ஸ்ரீமான் கிருஷ்ண பாகவதர் குடைந்தையில் இரண்டு மாத காலமாக அநேக விடங்களில் பகவத் கதா பிரவசனங்கள் செய்துவருகிறார். ஒவ்வொரு இடத்தில் ஆயிரக்கணக்கில் ஸ்திரீ புருஷர்கள் வந்து கேட்டு பக்தி பரவசமாகி வருகிறார்கள்.

குடந்தை, ஆசாரியத்தெரு வாஸிகளுடைய வேண்டுகோளுக்கு இணங்கி ஸ்ரீமான் பாகவதர் சில கதைகளை நடத்தினார். ஒவ்வொரு தினத்திலும் ஏராளமான கூட்டம் வந்திருந்தது. நகரத்திலுள்ள எல்லா வகுப்பு பிரமுகர்களும், பிரபல வித்வான்களும், தினம் விஜயமாகியிருந்தார்கள்.

சென்ற திங்கள்கிழமை இரவு ஸுபத்ரா கல்யாண கட்ட உபந்நியாஸத்துடன் அத்தெரு கதா பிரவசனம் முடிவடைந்தது. இன்று இரவு கதைக்கு அதிக கூட்டம் வந்தது. வலங்கிமான் முன்ஸீப் முதலிய லௌகிக கனவான்களும், மஹாமஹோபாத்யாய ஸ்ரீ கிருஷ்ணமசாரியார் போன்ற வித்வத் சிரேஷ்டர்களும் வந்திருந்தார்கள்.

கதையின் முடிவில், ஸ்ரீமான் அக்னிஹோத்ரம், ராமானுஜதாதாசாரியர், மஹாமஹோபாத்ய ஸ்ரீகிருஷ்ணமாசாரியஸ்வாமி ஆகியவர்கள் பாகவதரின் கதாபிரவசன நிபுணத்வத்தைப்பற்றியும், அவரது கதையால் ஜனங்கள் மெய்மறந்து பக்தி பரவசமாகி வருவதைப்பற்றியும் புகழ்ந்து பேசினார்கள். தெருவாஸிகளின் சார்பாக டவுன் ஹைஸ்கூல் உபாத்யாயர் ஸ்ரீமான் எம். ராமராவ் பாகவதருக்கு வந்தனம் கூறினார். பாதவதருக்கு பலர் மாலை சூட்டினார்கள். ஸம்மானங்களும் செய்யப்பட்டன. பாகவதர், தம்மை கௌரவித்தவர்களுக்கு நன்றி கூறினார். ஸ்ரீமான் ராமசந்திரராவ், பஞ்சாபகேசய்யர் முதலியவர்களுடைய முயற்சி பாராட்டப்பட்டது.

ஸ்ரீமான் பாகவதர் அவர்கள், பின்பாட்டு, மிருதங்கம் போன்ற ஆடம்பரங்கள் வைத்துக்கொள்ளவில்லை. அப்படியிருந்து ஆயிரக்கணக்கில் ஜனங்கள் கூடுவதிலிருந்து அவருடைய பக்திரஸ பிரவசனத்தில் ஜனங்கள் விசேஷமாக ஈடுபட்டிருப்பது வெளியாகிறது. ஸ்ரீ புரந்தரதாஸ் போன்ற பக்த சிரோமணிகளின் பாடல்களையே பாகவதர் உபயோகித்து ஜனங்களுக்கு பக்தி சிரத்தையை வளர்த்து வருகிறார். பக்தி ரஸத்தில் அவர் மெய்மறந்து ஈடுபட்டவர். ஸமயம் நேர்ந்தபோதெல்லாம் ஸநாதந தர்ம மஹிமையையும் ஜனங்களுக்குப் போதித்து, சீர்திருத்தங்களைக் கண்டிக்கவும் அவர் தவறுவதில்லை. குடந்தையில் இவருடைய பிரவசனத்தால் மதத்தில் புதிய ஊக்கம் பலருக்குப் பிறந்திருப்பதில் ஐயமில்லை.

நமது நிருபர்.

டென்மார்க் ஜர்மன் வசமாகியது

நார்வேமீது படையெடுப்பு

ஜர்மானியானது டென்மார்க் என்ற தேசத்தை தமது ராணுவ பலத்தைக் கொண்டு வசமாக்கிக்கொண்டுவிட்டது. அத்தேச கவர்மெண்டார் யுத்தமின்றியே ஜர்மனிக்குப் பணிந்துவிட்டனர்.

நார்வேமீதும் ஜர்மனி படையெடுத்திருக்கிறது.

கவர்னர் ஆக்ஷியை நீடிக்கயோஜனை

பார்லிமெண்டில் அநுமதி வாங்கப்படும்.

இந்தியா மாகாணங்கள் சிலவற்றில் காங்கிரஸ் மந்திரிகள் ராஜீநாமா காரணமாக சட்டஸபையேயில்லாமல் கவர்னர் ஆக்ஷி நடைபெற்றுவருகிறதல்லவா? இப்போதுள்ள நிலைமையில் இன்னும் ஒருவருஷம் வரையில் கவர்னர் ஆக்ஷியை நீடிக்க பிரிடிஷ் மந்திரி ஸபை தீர்மானித்திருக்கிறது. பார்லிமெண்டில் இதற்கு அநுமதி வாங்கப்படுமாம்.

மன்னார்குடியில் ஸநாதன தர்ம பிரசாரம்

இவ்வூர் அகில இந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி ப்ரும்ம உத்ஸவத்தில் மூன்றுவது தினமான சேஷ வாகனத்தன்றும் நான்காவது தினமான கருடசேவை யன்றும் விசேஷ பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. சபையாரின் விசேஷ அழைப்பிற்கிணங்கி காரைக்குடி ஜில்லா வர்ணாச்ரம சுயராஜ்ய சங்க பிரசாரகர்கள் ஆத்தங்குடி ஜோதிஷ வித்வான் ஸ்ரீ உ. ப. வே. மணவாளய்யங்கார், தி. ப. ஜெகதீசய்யர் இருவரும் விஜயம் செய்திருந்தனர். உள்ளூர் சபை காரியதரிசியும் சனாதன பிரசாரகருமான ஸ்ரீ உப. வே. ராமபத்ராச்சாரியார் ஸ்வாமிகள் இருதினங்களிலும் விசேஷ உற்சாகத்தினிடையே நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் சபையினருக்கு வெளியூர்களிலிருந்து வந்திருந்த பிரசாரர்களை அறிமுகப்படுத்தி சபையின் நோக்கங்களை வெளியிட்டு முகவுரையாக பேசியபின் ஸ்ரீ தி. ப. ஜெகதீசய்யர் "ஸநாதனிகளின் தற்கால நிலைமையும் அவர்களது கடமையும்" என்பதைப் பற்றி உத்வேகமாகப் பேசுகையில், காங்கிரஸ் மத சமூக விஷயங்களில் தலையிட்டு தீண்டாதார் ஆலய பிரவேச் சட்டம் செய்ததின் கொடுமையையும் காங்கிரஸின் வரம்பு மீறிய செய்கையையும் பலமாகக் கண்டித்தும், ஷை சட்டம் ரத்து செய்யவேண்டி ஸநாதனிகள் தீவிரமாக செயல் புரியவேண்டியும் சபைகள் நாடெங்கும் நிறுவி கட்டுப்பாடான முறையில் பிரசாரம் செய்ய வேண்டியதற்கு மடாதிபதிகள் வேண்டிய ஏற்பாடு செய்ய முன் வரவேண்டுமென்றும் வற்புறுத்தினார்கள். 6—4—40 சனிக்கிழமை மாலை 3 மணி முதல் 5 மணி வரையிலும், கோபிநாத்ஸ்வாமி கோவில் வாசலில் அன்று இரவு 7 மணி முதல் 8½ மணி வரையிலும் ஸ்ரீ உப. வே. ராமபத்ராச்சாரி ஸ்வாமிகள் தலைமையிலும் 7—4—40 ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணி முதல் 9 மணி வரையில் அகோபில மடத்திற்கு முன்னால் ஸ்ரீ உப. வே. மணவாளய்யங்கார் ஸ்வாமிகள் தலைமையிலும் ஷை கூட்டங்கள் நடைபெற்றன, பொதுமக்களிடையே விசேஷ உணர்ச்சி ஏற்பட்டுள்ளது. இக்கூட்டங்கள் நன்கு நடைபெற உள்ளூர் ஸ்ரீ ராமபத்ராச்சாரிய ஸ்வாமிகள் எடுத்துக்கொண்ட முயற்சி பாராட்டுதற்குறியது.

(ந. நி.)

பால்ய விவாஹ தடை மசோதா

கோச்சி துரைத்தனத்தாரின் நடுநிலைமை

கொச்சி சட்டசபையில் ஒரு ஸ்திரீ மெம்பரால் கொண்டுவரப்பட்ட ஷை மசோதாவானது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஸ்ரீ டி. வி. சுப்ரமணியய்யர் என்கிற மெம்பர் தக்க காரணங்களை கூறி ஷை மசோதாவை பலமாக ஆட்சேபித்தார். அவரை பின்பற்றி பல மெம்பர்கள் பேசினர்.

ஸ்ரீ டி. எஸ். ராமச்சந்திர அய்யர் தன்னுடைய தொகுதியின் சார்பாக மசோதாவை கண்டித்து ஒரு மகஜரை சமர்ப்பித்தார்

திவான் தலைவர் பதிலுரைக்கையில், கவர்ன்மெண்டார் இந்த மசோதா சம்பந்தப்பட்டவரை நடுநிலைமை வஹிக்கப்போவதாகவும், கவர்ன்மெண்டு மெம்பர்கள் தங்கள் இஷ்டப்படி ஒட்செய்யலாம் என்று கூறினர்.

TEMPLE ENTRY SUIT.

Ultra Vires issue.

Madura Case Judgment

Sreelasri Thirungana Pandarasannadhi & others ... Plaintiff.
R. S. Nayudu & others ... Defendants.

I. Provincial Legislatures have under Section 100 of the Government of India Act read with Legislative Lists II and III a right to legislate upon Charitable institutions and Actionable wrongs. Temples are charitable institutions and indemnity is a topic covered by "Actionable wrongs". The Madras Act XXII of 39 must be deemed to deal with these two matters and is therefore intra vires.

II. Though the Madras Act confers upon the excluded classes the right to enter and offer worship in caste Hindu temples, it has omitted to define and demarcate the limits up to which they can proceed for that purpose. It has therefore become the duty of the Court to supply the defect or omission and to determine the limits in this suit itself.

III. For determining and demarcating the limits, the Court has to ascertain the laws, customs and usages which were holding the field on 8—7—39 when the entry was effected.

IV. In applying these laws customs and usages, two apparently conflicting aspects have to be borne in mind and harmonised and given effect to. *Firstly*, by reason of the New Act, a place for worship has to be allotted to the excluded classes within the temple, in the same way as a place has been allotted within the temple to the Sivadwajas (temple priests) in the Garbhagraham (Sanctum Sanctorum), and to the Brahmanas in the Arthamandapam, (the portion immediately touching the Garbhagrsaha). *Secondly*, the rights and privileges of the caste Hindus to enter and offer worship from the places allotted to them under the binding laws, customs and usages of the institutions ought at the same time to be respected and protected. In other words the assignment of a place for the excluded classes ought not to be made in a manner which will trench upon and prejudice the existing rights of the caste Hindus.

V. In as much as on 8—7—39 the prohibited classes admittedly effected entry into the Ardhamandapam to which under no circumstances (whether under the New Act or under the ancient laws and usages) they had right of access, it has become necessary for the court to determine what kind of purification ceremony has to be performed, at what cost and at whose cost.

VI. The Plaintiffs have put forward their case already on these points in the plaint. The defendants are directed to file on or before 10—4—40 their statements setting out their case on these matters.

தமிழ்நாடு கமிட்டி

ஸத்யாக்ரஹஸபையாக மாறியதாம்

தமிழ்நாடுகாங்கிரஸ்கமிட்டியானது இனி ஸத்யாக்ரஹக் கமிட்டியாக மாறிவிட்டதென்றும், மற்றஜில்லா கமிட்டியும் இவ்வாறே மாறவேண்டுமென்றும் கார்யக் கமிட்டியில் தீர்மானிக்கப் பட்டிருக்கிறதாம்.

மன்னார்குடி வித்வத் ஸபா.

கோட்டூர் ஸ்ரீ ரெங்கஸாமி முதலியார், எஸ்டேட்டின் ஆதரவில் நடைபெறும் வித்வத் ஸபையானது இவ்வருஷம் உத்ஸவ காலத்தில் ஸ்ரீமான் பாலகிருஷ்ண முதலியார், அவர்கள் மேற்பார்வையிலும் சிறந்த நிர்வாஹத்திலும் நடைபெற்று வருகிறது. ஸ்ரீமான் பாலகிருஷ்ண முதலியார் அவர்கள் மிகுந்த பக்தியோடும் சிரத்தையோடும் யாதொரு குறைவுமின்றி ஸபையை நடத்தி வருகிறார். தர்ம நிர்வாஹத்தில் சிறந்த அறிவோடும், ஆழ்ந்த சிரத்தையோடும், கம்பீரமான பரந்த நோக்கத்தோடும் நடந்து வரும் ஸ்ரீமான் முதலியார் அவர்கள் இந்த வித்வத் ஸபைக்கு நிர்வாஹராக அமைந்திருப்பது அறிவாளிகளின் உலகிற்கு ஏற்பட்ட பாக்கியமென்றே கூறவேண்டும். புராதன ஹிந்து மதமானது என்றும் உயிரோடு இருந்துவரும்படி செய்ய அவர் ஸதா சிந்தனை செய்து வருகிறார். முக்கியமாக நவீனர்களுடைய மனதில் மத உணர்ச்சியானது, நன்கு பதியவேண்டுமென்பதற்காக இவர் பாடுபடுகிறார். ஆழ்ந்த ஆலோசனையும், நல்ல மத பக்தியுமுள்ள ஸ்ரீ முதலியார் ஒவ்வொரு உபன்யாஸத்தையும் ஆழ்ந்து கவனித்து வருகிறார். இவ்வருஷம் ஒலிப்பரப்பும் கருவியும் வைக்கப்பட்டிருக்கிறது. இதனால் ஒவ்வொரு உபன்யாஸத்தையும் ஜனங்கள் சிரமமில்லாமல் கேட்டு ஆநந்திக்கிறார்கள். ஸபை ஸம்பந்தமாக வந்துள்ள வித்வான்கள் யாதொரு குறைவின்றி மிகுந்த சிரத்தையோடு உபசரிக்கப்படுகிறார்கள்.

ஸபை ஆரம்பதினத்தில் வேதாந்த கல்பத்ரு ஸ்ரீ-உ. வே. வித்வான் புத்தங் கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமிகள் ஸம்ஸ்கிருத பாஷையின் மேன்மையைப்பற்றி அழகாகப் பேசினார். இரண்டாவது நாள் கும்பகோணம் அக்னிஹோத்திரம் ஸ்ரீராமானுஜ தாத்தாச்சாரியர், நவீன காலத்திற்கும் ஹிந்து மதமே ஏற்றது என்று சுருதி, ஸ்மிருதி, ஸயன்ஸ், உலக சரித்திரம் இவைகளைக் கொண்டு நிரூபித்தார். மூன்றும் நாள் சென்னை ஹைக்கோர்ட்டு மாஜி ஜட்ஜ் வி. வி. சீனிவாச அய்யங்கார் அவர்கள் விசிஷ்டாத் வைத தத்துவத்தை நன்கு விளக்கி வாழ்கையில் அது எவ்விதம் பயன்படுகிறது என்பதை நிரூபித்து கம்பீரமாகப் பேசினார். அண்ணாமலை யுனிவர்ஸிடியைச் சேர்ந்த ஸ்ரீமான் ராமனுதபுரம் ராகவ அய்யங்கார், சென்னை தமிழ் பண்டிதர் ஸ்ரீமான் ஸேதுபிள்ளை அவர்கள், கோயமுத்தூர் மாஜி சட்ட சபை மெம்பர் ஸி. வி. ஸ்ரீ வெங்கட்ரமணி அய்யங்கார் போன்ற பல அறிவாளிகள் சொற்பொழிவாற்றினார்கள்.

வேத, சாஸ்திர பாடசாலைகள் மூலமாகவும், வித்வத் ஸபை மூலமாகவும், இன்னும் பல தர்மங்கள் மூலமாகவும் கோட்டூர் ஸ்ரீ முதலியார் அவர்கள் ஹிந்து மதத்திற்கு மஹத்தான உபகாரத்தை செய்திருக்கிறார். இந்த மஹத்தான கைங்கரியத்தை தைரியத்தோடும், உறுதியோடும் நிஷ்பக்ஷபாதமாகவும் நியாயத்தோடும், நடத்திவரும் ஸ்ரீமான் முதலியார் அவர்களுக்கு ஈசுவரன் ஸர்வ மங்களங்களையும் கொடுத்தருள வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். (ந.கி.)

திப்பிராஜபுரம்

ஸ்ரீப்ரும்ம வித்தியா ஸபாவில் 4—4—40 வியாழக்கிழமைதினம் ஆங்கரை ப்ரும்மஸ்ரீ ரெங்கஸாமி சாஸ்திரிகளவர்களால் சிலமாதங்களாக சொல்லப்பட்டுவரும் "ஸ்ரீப்ரும்மஸூத்ர" உபன்யாஸம் அதில் கடைசிபாகமான "பலாத்யாயத்துடன்" ஸமாப்தி அடைந்து உபன்யாஸகரும் பஹுமானிக்கப்பட்டார்கள்.

6—4—40உ சனிக்கிழமை வரகூர் ப்ரும்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்கள் அரியதோர் உபன்யாஸம் செய்தார். ந.கி.

ஸ்ரீமத் வால்மீகி ராமாயண ஹரிகதா ஸீரிஸ்

கும்பகோணம்

ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் அனுக்கிரஹத்தை முன்னிட்டு, கும்பகோணம் மடத்துத்தெரு ஷை ஸ்ரீ ஆசார்யாள், மடத்தில் பிரும்மஸ்ரீ T N ரகுநாத பாகவதர் அவர்களால் தக்க பக்கவாத்யங்களுடன் ஸ்ரீமத வால்மீகி ராமாயணத்தை 28-ஹரிகதைகளாக ஒன்றுவிட்டு ஒருநாள் வீதம் நடத்த நிச்சயித்து நாளது ப்ரமாதி-ஸூ பங்குனி-மீ 25-உ (7—4—40) ஞாயிற்றுக்கிழமை இரவு 8-மணிக்கு ஷை ஸீரிஸின் முதல் சரித்திரமாகிய ஸ்ரீமத் வால்மீகி சரித்திரத்தை ஆரம்பம்செய்து நடத்தப்பட்டது. (ஓ.கி)

ஆழ்வார் திருநகரி

போர்டில் அப்பீல்

ஆழ்வார் திருநகரி ஸ்ரீ ஆதிநாதர் ஆழ்வார் தேவஸ்தான ஆபரணம் வகையரு, ஸ்தலபிரமுகர்களான மிராசுதார்கள் பலர் பொறுப்பில் கோயில் கட்டிட அறைக்குள் வைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகிறது. ஸ்தலத்தார்கள் வசமுள்ள திருவாபரண பொக்கிஷ அறைகளின் சாவிகள் தம்மிடமும் மற்றொன்று இருக்கவேண்டுமெனவும் அவர்கள் வர தாமதமானல் போலிஸ் முன்னிலையில் பெட்டிகளைத்திறக்கலாமெனவும் கோயில் நிர்வாஹ ஆபீஸர் ஸ்ரீமான் எல். ஆர். குருசாமிநாயிடுவால் சென்னை எண்டோமெண்ட் போர்டில் எக்ஸ்பார்ட்டி ஆர்டர் ஒன்று வாங்கப்பட்டிருப்பதாயும் நிர்வாஹ ஆபீசர்கள் அடிக்கடி மாறிவரும் வெளியூரார் களாகையால் அவர்களது பார்வையில் லக்ஷக்கணக்கில் பெருமதிப்புள்ள ஆபரணம் வகையருவை ஒப்படைப்பது தகுதியல்லவென ஸ்தலத்தார்களான மிராசுதார் பெரியன் ஸ்ரீ வீ. என். ஸ்ரீ நிவாஸய்யங்கார் ஸ்ரீ வீ. எ. பெரியதிருவடி ஐயங்கார் வகையருவால் குறிப்பிடப்பட்டு எக்ஸிகூடிவ் ஆபீஸரின் எஸ்பார்ட்டி ஆர்டரை மாற்ற தேவஸ்தான போர்டில் தாவா செய்யப்பட்டிருப்பதாயும் தெரிகிறது.

ந.வி.நி.

என். ஜி, ரங்காவுக்கு தண்டனை

உத்திரவை மீறிய குற்றம்

இந்தியா சட்டஸபை மெம்பரான ஸ்ரீமான் என். ஜி, ரங்கா என்பவரை இந்தியப்பாதுகாப்புச் சட்டப்படி சென்னை நகரத்தைவிட்டு வெளியேறிப் போகும்படியும், தமது ஊரைவிட்டு அவர் வெளிக்கிளம்பக்கூடாதென்றும் சென்னைகவர்ன்மெண்டார் ஓர் உத்திரவு பிறப்பித்தார்கள்.

ஸ்ரீமான் ரங்கா இந்த உத்திரவை மீறி நடந்தார். அதன் மேல் அவர் கைது செய்யப்பட்டு சீப்பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டால் விசாரிக்கப்பட்டு ஒருவருஷக்கடுங்காவல் தண்டனையும் 600ரூ அபதாரமும் விதிக்கப்பட்டார்.

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்

கோவிலூர்

23—3—40-உ மாலை 5-மணிக்கு கோவிலுக்குமுன் அமைத்திருக்கும் மண்டபத்தில் கோட்டையூர் வ. சு. சங்கத்தலைவர் ஸ்ரீமான் கூ. வீ. சொ. வீ. அழகப்ப செட்டியார் தலைமையில் பொதுக்கூட்டம் நடை பெற்றது. ஷெ கூட்டத்திற்கு பல ஊர்களிலிருந்தும் செட்டிமார் நகரத்தார்களும், சாதுக்களும், தாய்மார்களும் விஜயம் செய்திருந்தது போற்றத் தக்கது.

தலைவர் பேசியதில் இந்த செட்டிநாடு "96" நகரத்தும் பிரதானமாகிய இக்ஷேத்திரத்தில் இன்றைய எங்கள் ஆண்டவருடைய ஆராதனை தினத்தில் என்னை அக்ராசனராக தேர்ந்தெடுத்தது எனது பாக்கியமே! என்றும் கூட்டத்தின் நோக்கத்தை கூறி சங்கத்தில் யாவரும் அங்கத்தினராக சேர்ந்து சபையை பலப்படுத்த வேண்டிய அவசியத்தை பற்றி யாவர் மனதிலும் பதியும்படி எடுத்துக் கூறினார்.

பிறகு ஸ்ரீ வி. வி. ரெங்கனாத சாஸ்திரிகள்ஸ்ரீல ஸ்ரீமடாலயத்து மகேஸ்வரநந்தகிரி சுவாமிகள், காரைக்குடி ஜில்லா சங்க காரியதரிசி எஸ். வெங்கிடாசாரியார் அவர்கள் முறையே தர்மத்தின் மேன்மையை பற்றியும், காங்கிரஸ் காரர்கள் பொய் சொல்லி ஜனங்களை ஏமாற்றுவதை பற்றியும், சங்கத்தின் நிர்மாண திட்டங்களின் நோக்கத்தை பற்றியும் விரிவாக எடுத்து கூறினார்கள்.

பின்னர் அடியிற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின.

தீர்மானங்கள்

இந்தியாவில் சிலகாலம் கவர்னராயிருந்த கனம்ஸர்மைக்கேல் ஓட்வியர் என்பவர் வெறிபிடித்த ஓர் இந்தியனால் சுட்டு கொல்லப்பட்டதை சனாதனிகளாகிய நாங்கள் வெறுப்பதுடன் அவர்கள் குடும்பத்தாருக்கும் எங்கள் அனுதாபத்தை தெரிவித்து கொள்கிறோம்.

கனம் இந்தியா மந்திரி லார்டு ஜெட்லண்டு, ஸர்லுயிடேன் லார்டுலாமிங்டன் இவர்களுக்கு சொற்ப காயம் ஏற்பட்டது சௌக்கியமாவதற்காக கடவுளை பிரார்த்திக்கிறோம், இதை காரைக்குடி வீ. வெங்கிடாசாரியாரால் பிரேரிக்கப்பட்டு இவ்வூர் சபை தலைவர் வீ. வீ. ரெங்கனாதசாஸ்திரிகளால் ஆதரிக்கப்பட்டு திருகோஷ்டியூர் டி. ஆர். குப்பணய்யங்காரால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேறின.

2, காங்கிரஸ் மந்திரிசபையாரால் செய்யப்பட்ட சட்டங்களில் விற்பனை வரி சட்டம், புகையிலை வரி சட்டம், வார்தாகல்வி டிரைனிங் சட்டம், கட்டாய இந்தி சட்டம், மதுவிலக்கு விஸ்தரிப்பு சட்டம், இவைகளை மதராஸ் கவர்னர் அவர்கள் ரத்துசெய்ததுபோல், தீண்டாதார் ஆலய பிரவேச சட்டத்தையும் ரத்துசெய்யவேணுமாய் இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது இதை சபை காரியதரிசி கே. ஏ. ராமசாமியால் பிரேரிக்க காரைக்குடி எஸ். வெங்கிடாசாரியார் ஆதரிக்க ஆத்தங்குடி சுப்பிரமணியம் செட்டியாரால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது.

கடைசியாக தலைவர் முடிவுரையில் தர்மத்தை எல்லோரும் அறியும்படி செய்ய வேண்டியது அவசியம் அதற்கு ஒவ்வொரு ஊரிலும் சங்கம் அவசியமென்றும் ஆகவே இனிதாமதியாமல் ஒவ்வொரு இடமும் சபை ஏற்படுத்த வேண்டியது என்று சொல்லி நான் அக்கிராசனம் வகிக்க சபையோர்கள் தேர்ந்தெடுத்தற்கு சபையோர்களுக்கு வந்தனத்தை செலுத்தி முடித்து கொண்டார்கள்.

பின்னர் கார்யதரிசி கெ. ஏ. ராமசாமியால் தலைவர் அவர்களுக்கும், அங்குவிஜயம் செய்திருந்த செட்டிமார் நகரத்தார்களுக்கும் சாதுக்களுக்கும், மற்றும்விஜயம்செய்திருந்த சபையோர்களுக்கும் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கரகோஷத்துடன் இரவு 9-30மணிக்கு கலைந்தது.

கார்யதரிசி

ப்ரமாண பரீக்ஷணம்

நாகப்பட்டிணம் ஹிந்து மதாபிமான ஸங்கத்தில் பிர்ம்மஸ்ரீ போலகம் சுந்திரேச சாஸ்திரிகளால் செய்யப்பட்ட உபந்நியாஸம்:—

நமக்கு ப்ரமாணங்கள் நான்கு. அவைகள் ப்ரத்யக்ஷம் அனுமானம் உபமானம். சப்தம் எனப்படும். இவைகளில் ப்ரத்யக்ஷம் என்பது பிராணிகள் எல்லோரும் பிறந்தமாத்திரத்தில் தன்னையும் தன் அவயவங்களையும் பற்றி தானாகவே ஏற்படுகிறது. ஆகையால் அது ஜ்யேஷ்டப் ப்ரமாணமென்று கூறப்படுகிறது. பிறகு அனுமானப்ரமாணமே உபயோகப் படுகிறது. மிருகங்களும் மனிதர்களும் ஸ்தன்யபானத்தில் பிறந்தவுடன் ப்ரவர்த்திக்கிறதை நாம் பார்க்கிறோம். ஸ்தன்யபானம் தன்னுடைய பசியைப் போக்கும் என்பது அனுமானத்தினாலேயே தெரியவேண்டும். காடுகளில் கன்றுகள் தானாகவே எழுந்திருந்து ஊட்டுவதற்கு ஆரம்பிக்கின்றன. ஆகையால் நமமெல்லோருக்கும் அனுமான ப்ரமாணமே இரண்டாவதாக எடுத்துக் கொள்ளப் படுகிறது. இவ்விதம் உபமான சப்தங்களும் வரிசையாக ஏற்படுகிறது. இவைகளில் ப்ரத்யக்ஷம் இவ்வுலகில் சில வ்யாவஹாரங்களுக்கு மாத்திரம் ஸாதனமாக இருந்து கொண்டிருக்கிறது மற்ற மூன்று ப்ரமாணங்களும் லௌகிகத்திற்கும் பரலோகம் தர்மாதர்மம் ஆத்மதத்வம் முதலிய அதீந்திரிய வஸ்துக்களின் அறிவிற்கும் உபயோகப்படுகின்றன அதிலும் ஆகமரூபமான சப்தப்ரமாணமே நாம் அடையவேண்டிய சாச்வதமான ஸகலநன்மைகளுக்கும் முக்கியமானது.

அதிலும் வேதம் என்பதே உயர்ந்தப்ரமாணம் மற்றப்ரமாணங்களில் அவச்யம் வெகுவிதமான தோஷங்களின் ஸம்மந்தம் ஏற்படும் அதனால் அச்சமயம் அவைகள் உண்மையை அறிவிக்கமாட்டா. வேதமோ எப்பொழுதும் தோஷமில்லாதது அதற்கு அபௌருஷேயமாக யிருப்பதே முக்யகாரணம். வேதத்தின் கருத்தை விளக்குவதற்காகவே ஸ்மிருதிகள் புராணங்கள் மீமாம்ஸாதி சாஸ்திரங்கள் மகர்ஷிகளால் செய்யப் பட்டிருக்கின்றன. வேதவிருத்தமாயிருந்தால் எதுவும் ப்ரமாணமல்ல வென்பதே நமது ஸித்தாந்தம் ப்ரமாணங்களை நாம் பரீக்ஷித்து தாரதம்யங்களை நிர்ணயம் செய்து கொண்டால் நாஸ்திகர்களின் வாக்யங்களால் நாம் ஏமாந்து போகாமலிருக்கலாம். ஆகையால் மூலப்ரமாணமான ஈச்வரமுகமாக ஆவிர்பவித்த வேதமே நமக்கு ஸகலச்ரேயஸ்ஸையும் கொடுப்பதற்கு வல்லமையுள்ளது. பிராம்மண குடும்பத்தில் ஒவ்வொருவரும் தங்கள் பையன்களை கொஞ்சமேனும் வேதாத்யயனம் செய்யும்படிச் செய்வதும் மிக்க அவசியம். வேதம் சாஸ்வதமென்பதும் அதன் உண்மையான மீமாம்ஸாதி நியாய ஸித்தமான அர்த்தங்களை யுக்திகளினால் மாற்றமுடியாதென்பதும் ஸ்ரீமத் ராமாயணத்தில் ஜடாயு ராவணஸம்வாதத்திலும் ஸ்ரீமகா பாரதத்தில் ஹனுமத் பீமஸேன ஸம்வாதத்தினாலும் வ்யக்தமாகத் தெரிய வருகிறது.

மதத்தின் தற்கால நிலைமை

(கே. ஆர். வைத்திநாத சாஸ்திரி சிரோமணி, மேலக்காவேரி.)

கலியின் மகிமையால், குரு சிஷ்யன் இவர்களுக்கு இருக்கவேண்டிய கிரமமானது வெகு தூரம் விலகிவிட்டது இது ச்ருதி இது ஸ்மிருதி என்றும் இது தான் அவைகளின் உண்மையான கருத்து என்கிற இவையாவும் நஷ்டமாயின, ஜாதிகள் அவைகளுக்குறிய தர்மங்கள், வேதங்களின் பிரிவு, அர்த்தவிவரணம் இக்காலத்திய ஜனங்களின் ஆசாரம் அவர்களுக்கு தர்மாதர்மங்களை உபதேசிக்கும் ஆசிரியர்கள் எல்லாம் புதிதுபுதிதாக ஏற்பட்டிருக்கின்றன

முன்காலத்தில் எவ்விதபிரதிபாசாலிகளாகயிருந்தபோதிலும் ஒருவித வைதிக வித்தையில் பயிற்சியடைய வேண்டுமென்கிற எண்ணமிருந்தால் ஆசாரியாளின் அருகில் சென்று அடிபணிந்து மிகுந்த பக்தியுடன் அவர்களை தமக்கு உபதேசிக்க வேண்டுமென்று வேண்ட, கருணாநிதிகளான அவ்வாசரியர்களும் சிஷ்யனின் விநயஸம்பத்தைக்கண்டு சந்தோஷமடைந்து அனுக்ரஹ பூர்வமாய் உபதேசிப்பார்கள். சிஷ்யர்களும் ஒவ்வொருநாளும் அவர்களின் வைதிககர்மாக்களுக்கு வேண்டிய காரியங்களைத் தங்களாலியன்றமட்டும் நடத்தி வித்யாபூர்த்தி ஆனதும் ஆசாரியரிடம் வந்தனம்செய்து அவரது அனுக்ரஹம் பெற்று தம்கிரஹம் செல்வது வழக்கம். கலியின்மகிமை வாய்ந்த இக்காலத்திலோ முன்புபோல குருவைத்தேடிச் செல்வதுதேவையில்லை புத்தியின் வன்மையால் சகல சாஸ்திரங்களும் நன்கறிந்தாகிவிட்டதென்றும் இனிதெரிந்து கொள்ள வேண்டியது ஒன்றுமில்லை யென்றும் ஒரு பெரியார் தீர்மானிக்கிறார்.

இவ்விதமிருப்பவர்களுக்கு உபதேச முறையில் வரவேண்டிய ரகஸ்யார்த்தங்கள் ஒன்றும் தெரியாததோடு, ச்ருதி என்றால் அதன் ஸ்பரூபம்இவ்விதம், ஸ்மிருதி என்றால் இவ்விதம் இவைகளின் உண்மையான கருத்து இதுதான் என்கிற இவையாவும் மறைந்துவிட்டன.

வர்ணாச்ரம தர்மங்களுடைய வியவஸ்தைக்கு முக்ய ஆதாரங்களான ஸ்மிருதி முதலிய பிரமாணங்கள் மாறவே ஜாதிகளும் அவைகளுக்குரிய தர்மங்களும் வேதங்களின் உட் பிரிவுகளும் அவைகளுக்கு அர்த்தவிவரணம் செய்வதும் இப்போது இருப்பவர்ளுடைய ஆசாரமும் இவர்களுக்குத்தர்மோபதேசம் செய்யும் ஆசார்யரும் புதிதுபுதிதாக ஏற்பட்டிருக்கின்றார்கள். மனு முதலிய மகரிஷிகளைப்போல தங்களையும் கலிகாலத்தில் தர்மஸ்தாபனார்த்தமாய் அவதரித்த மகரிஷிகளென்று எண்ணங்கொண்டு சிலர் தன்னிஷ்டப்படி பல நூல்களையும் இயற்றிவருகின்றார்கள். அதிகமாய்ச்சொல்லியென்ன? அநாதிகாலமாய் ஆர்யர்களால் அனுஷ்டிக்கப்பட்டுவந்த சிறந்த ஸநாதனதர்மமும் ஆர்யதர்மமும் நேர்விபரீதமாய் மாறுதல் அடைந்திருக்கின்றன. ஸர்வேச்வரன்தான் காப்பாற்றவேணும்.

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும் கைகண்ட இந்தியமருந்து இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறார்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்.

வெளியூர்ச் செய்திகள்

திருவாமாத்தூர்

ஓர் அரிய உபந்யாஸம்

திருவமாத்தூர் வேதபாராயண தர்மத்தை நடத்துவதற்காக வந்திருந்த ஸ்ரீ ஸோமதேவ சர்மா அவர்களை டாக்டர் மணி அவர்கள் இரு உபந்நியாசங்கள் செய்ய வேண்டி விழுப்புரம் அனுமார் கோவிலில் ஓர் சிறிய பந்தல் அமைக்கப்பட, ஐந்தாறு மைல் தூரத்திலுள்ள கிராமங்களிலிருந்து ஆண்களும் பெண்களும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சூழ்ந்திருந்தனர். ஞாயிறு இரவு "சதாசாரம" என்கிற விஷயத்தை எடுத்துக் கொண்டு ஆசாரத்தின் பெருமையையும் முன்னோர்கள் நீண்டாயுள் பெற்று சுகமாக அஃதால் வாழ்ந்ததையும், அவ்வாசாரக் குறைவினால் நமக்கேற்பட்ட துன்பத்தினையும் பற்பல ஸம்ருதி புராண மேற்கோள்களுடன் யுக்தமாக விளக்கிக் காட்டி 2½மணி எடுத்துக் கூறினர். மறுநாள் இரவு மற்றும் பல ஊர்களிலிருந்து ஜனங்கள் திரள் திரளாக குவிந்தனர்.

ரயில்வே என்ஜினீர் முதலிய பற்பல உத்யோகஸ்தர்களும், ரிடையர்ட் மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீ நரஹரி சாஸ்திரிகள், ரிடையர்ட் ஹைகோர்ட் ரிஜிஸ்டார் ஸ்ரீமான் வெங்கட்ரமண அய்யர் முதலியோரும், வக்கீல்களும் பெண்மக்களும் குழுமி இருந்தனர். "ரிதத்வஜஉபாக்யானம்,, என்று மார்க்கண்டேய புராணத்திலிருந்து நவரசம் நிறைந்ததோர் கதையைவ்யாஜமாகக் கொண்டு பற்பல தர்மங்களை கேட்போர் மனம் உருகும்படி மிகஉருக்கமாக 3மணி விஸ்தாரமாக உபந்யாஸம் நடைபெற்றது. உபந்யாஸகரின் வேண்டுகோளுக்கிணங்கி ஆங்கு ஓர்வைதிகசபை ஆரம்பிக்கப்பட்டது. பலரும் உபந்நியாஸகரை விடுமுறைக்காலங்களில் வந்து பல உபந்நியாஸங்களை செய்யும்படி வேண்டினர்.

ந-நி.

உப்பலியப்பன் கோவில்

பங்குனி-மீ 15-உ திருநாகேஸ்வரதிற்கு அடுத்தாற்போல் உள்ள ஷை யூரில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் சேங்காலிபுரம் பாலகிருஷ்ணபட்டசாரியார் தலைமைவஹித்தார். சிதம்பரம்அண்ணாமலை சர்வகாலாசாலை சம்ஸ்கிருத சபை தலைவர் ஸ்ரீமான் ஏ. வி. சௌரிராஜன் சம்ஸ்கிருதத்தின் மேன்மை என்பதை பற்றி சுமார் ¾ மணி சம்ஸ்கிருதத்தில் திறமையாக உபன்னியாஸம் செய்தார். தலைவர் உத்திரவின் பேரில் 15-நிமிஷம் தமிழிலும் உபன்னியாஸம் செய்தார்.

ஷை கூட்டத்திற்கு வைகானஸ அர்ச்சகர்கள் பலர் கூடியிருந்தனர்.

நீலமேகப்பட்டாசாரி.

புதுச்சேரி

சதாபிஷேகம்

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிளான ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரியாள் பூர்ணாநுக்ரகத்தை முன்னிட்டு புதுசேரியில் வசிக்கும் ஸ்ரீமடத்தின் முக்ய சிஷ்யருன க. மார்க்கய்யர் அவர்களுக்கு 82 வயது பூர்த்தியில் நடத்த வேண்டுமென்று விதித்திருக்கிறபடி 28—3—40 யன்று ஷை சாந்தி வெகு விமர்சையாய் செய்யப்பட்டது.

இங்கு நடந்த ஆச்சார்யஸம்பாவனை காலத்தில். செய்யப்பட்ட மர்யாதை ஸ்ரீ ஆசார்யாளுக்கு எப்படி மர்யாதை செய்யவேணுமென்பதைதெரிவிக்ககூடியதாயும்.ஸ்ரீ ஆசார்யாள் நேரிலேயே இருப்பதாக ஒருபாவனையும் உண்டு பண்ணியது ஓர் விசேஷமாய் இருந்தது (ஓ-நி)

தென்னாற்காடு வர்ணாச்ரம ஸங்கம்

சிதம்பரம்

புதிய வருஷத்திற்கு அடியிற்கண்டவர்கள் தென்னாற்காடு ஜில்லா வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய சங்கத்திற்கு உத்தியோகஸ்தர்களாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள் :— பிர்மஸ்ரீ டி. இ. சடகோபாசாரியார், ஹைகோர்ட்டு வக்கீல் தலைவர்; ராஜா பாலசுப்பிரமணிய ஜடாவல்லபர், (தலைவர், ஜில்லா பிராம்மண சபை) கார்யதரிசி; ஏ. வி. வெங்கிடசுப்ரமண்ய தீக்ஷிதர் சமுதாய பாடசாலை, டிரஷரர்).

சிதம்பரம் டவுன் வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய சங்கத்திற்கு பிர்மஸ்ரீ நரசிம்ம சாஸ்திரிகள், (பிரன்ஸிபால், சிதம்பரம் ருக்வேத பாடசாலை) தலைவராகவும் :— ராஜகணேச தீக்ஷிதர், பிரபல சமஸ்கிருத பண்டிதர், காரியதரிசியாகவும், நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்,

சிதம்பரம் தாலுக்கா வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய சங்கத்திற்கு தலைவராகவும், பிரசாரகராகவும், பண்டிட் விஜயராகவாசாரியார் நியமனம் செய்யப்பட்டிருப்பதாகவும், அறிகிறோம்.

வர்ணாஸ்ரம தர்ம ஸ்வராஜ்ய சங்கத்திற்கு அதிக அங்கத்தினர்களை சேகரிக்க வேண்டியும், தென்னாற்காடு ஜில்லாவில் ஒவ்வொரு ஊரிலும் விஜயம் செய்து, தீவிர பிரசாரம் செய்து, ஸனாதன தர்மத்தை விருத்தி செய்யவும், இந்த ஜில்லா கமிட்டியார் ஏற்பாடு செய்து வருகிறார்கள். இது சம்பந்தமாக அதாவது, தீவிர பிரசாரத்தை முன்னிட்டு போதுமான படி வசதிகளைச் செய்து கொடுத்து கமிட்டியாரைக் கவனிக்க யார் முன் வரப்போகிறார்களோ தெரியவில்லை. இது "ஹரிஜன முன்னேற்ற" இயக்கமாக இருந்தால் ராஜீயத் தலைவர்கள், என்ன பிராம்மணீயத்தை இழந்த தற்கால பிராம்மணர்கள் என்ன காங்கிஸ் பற்பல ரகங்கள் என்ன முதலான கனதனவான்ககளும், பிரசாரம் வேண்டியது அவசியமென்று, விம்மி. விம்மி அழுவார்கள். பிர்லா—படேல்—தாக்கர்—பணம் குவியும். தற்போதைய நாஸ்திக கல்லூரிகளில் நம் பழமையான சைவகிரந்த வேதங்களை சாஸ்திரப்படி அருகதை அற்ற ஜாதியார்கள் கூடகற்க வேண்டிய வசதி வேணடுமானல் சைவ மதக்கல்வியை துராசாரமாகப் பரப்ப வேண்டுமானல், சைவசமயத்தை விருத்தி செய்யவேண்டி ஏற்படுத்தப்பட்ட மடாதிபதிகள் எல்லாம் நிலங்களை எக்ரா, எக்ராவாக எழுதிவைக்க முன்வருவார்கள் ஆனல், உண்மை ஸனாதனதர்மத்தைப் பிரசாரம் செய்ய உதவிபுரிய எந்த கனதனவான் முன் வரப் போகிறார்களோ? இக்காரணம் பற்றி, தென்னாற்காடு ஜில்லா வர்ணாஸ்ரம ஸ்வரஜ்ய சங்கத்தார் ஸனாதன தர்ம பிரகாரம் செய்ய ஏற்பாடுசெய்து வருவதானது பலிக்கவேண்டும்.

V. நாராயணஅய்யர், சிதம்பரம்

Printed by S. Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.